(1) ஒழுங்குப் பிரச்னை.

(ஆ) முன்னாள் உறுப்பினர் திரு. ஆசைத்தம்பி மறைவு குறித்து இரங்கல் குறிப்பு

திரு. எம். ஏ. லத்தீப் : தன்மான இயக்கத்தின் மிகப் பெரும் தலைவர், திரு. ஆசைத்தம்பி அவர்கள் மரணம் அடைந்து விட்டார்கள். அவர்களது மறைவு குறித்து இரங்கல் குறிப்பை சபையில் நிறைவேற்றியிருக்கிறீர்கள். இப்பேர்ப்பட்ட தலைவர்களுக்கு சாதாரணமாக இரங்கல் தீர்மானம் கொண்டு வந்து தலைவர்களாவது தமது அனுதாபக் கருத்துக்களைத் தெரிவிக்க அனுமதித்திருக்க வேண்டும். அப்படி வரும் என்றுதான் நான் கூட ரயில் நிலையத்திலிருந்து குளிக்காமல் கூட நேராக அவைக்கு வந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய அவையின் வழக்கமும் மரபும், சிட்டிங் மெம்பர் மறைந்தால்தான் அவ்வாறு அனுமதிப்பதுண்டு, தீர்மானம் கொண்டு வருவது. இதைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர்களிடமெல்லாம் கலந்து பேசிவிட்டுத்தான் எல்லோர்சார்பிலும் அனுதாபம் தெரிவிக்கும் முறையில் நான் ஆபிச்சுரிரெயரன்ஸ் கொண்டு வந்தேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : இந்த மன்றத்தில் உறுப்பினராகவே இல்லாத வெளியிலுள்ள தலைவர்களுக்குக் கூட அத்தகைய தீர்மானம் கொண்டுவந்து எல்லாத் தலைவர்களும் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விஷயம் முடிந்து விட்டது.

(4) உரிமைப் பிரச்னை

திருவாளர்கள் துரை முருகன், ரகுமான்கான், சுப்பு அவர்கள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையில் 184—வது விதியின்கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரை கோவிந்தராசன், திரு. திருப்பூர் ஆர். மணிமாறன், சின்னசேலம் மா. சுப்பிரமணியன், கே. பண்ணை சேதுராம் ஆகியோர் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினை அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளனர். திரு. துரை கோவிந்தராசன் அப்பிரச்சினையை எழுப்ப அனுமதி அளிக்கப்படுகிறது.